# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் - டிசம்பர் 2021
ஆண்டு 2 ▲ இதழ் 03



## அடங்காத நேசந்தான்..

கொதித்து வழியும்
பசும் பாலில்..
தெளித்துப் போன நீராய் உன் பேச்சு..

பெரும் முயற்சி செய்திட்டாள்..
கோபக்கனல் குறையாமல் இருந்திடவே..
மனதினிய சொற்களில்
குளிர் மணலாய் விரிந்தாளே..

சொல்லாமல் தூரம் சென்றுவிட்டு..
சொல்லாடலுக்கு ஒன்றும்
குறைவில்ல..


காலங்காலமாய் காத்திருக்க..
காலடி சத்தங் கேட்டு
காலில் வீழ்த்திடுமிந்த
பாழாய்ப் போன மனசு..

நெஞ்சில் கருவிய
வைராக்கியம்..
பஞ்சாய்ப் பறக்குது
என் ராசா..

விண்ணை கேட்கலையே..
பொன்னை
கேட்கலையே.. .
நிலவை கேட்கலையே..

உன்னோட சில நிமிடங்கள்.. உன்
இதயத்தில ஒரு பங்கு..
அன்பான வார்த்தையில தான்
ஆறிடுமே பாவி மனம்..

நயமா பேசாம..
வார்த்தையால கொன்னுடுவா..
அத்தனையும் பாசந்தான்..
கணக்கெடுத்தா
அடங்காத நேசந்தான்..
அடங்காத நேசந்தான்..



**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
நவம்பர் – டிசம்பர் 2021
ஆண்டு 2 ▲ இதழ் 03

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**
editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of ''Muththamizh kalasam'',

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

அட்டைப்பட ஓவியம் : அப்ஸரா




# ஆசிரியர் பக்கம்

அன்பின் வாசகர்களுக்கு வணக்கம்!

நமது ஒன்பதாவது இதழில் உங்களை சந்திப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, உங்களின் அன்புக்கரங்களை இணைத்தே தான் இத்தூரத்தை கடந்து வந்திருக்கிறேன் என்பதை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

இதழுக்கு ஆக்கங்கள் அனுப்புகையில் கவனிக்க வேண்டிம ஒன்று, வேறு இதழ்களுக்கு அனுப்பிய ஆக்கங்களையோ அன்றி ஏற்கனவே பதிவிட்டதையோ அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்! வாசிக்கும் எல்லோருமே ஏற்கனவே வாசித்த ஒரு படைப்பை மீண்டும் மீண்டும் வாசிக்க நேர்ந்தால் மனதளவில் சலிப்படையக் கூடும். அதனால் புதிதாக எழுதுங்கள்! சிறந்தது என நீங்கள் நினைக்கும் ஒரு படைப்பை எமக்கு அனுப்பி வையுங்கள்! தரமான ஆக்கம் நிச்சயமாக நிராகரிக்கப்பட மாட்டாது. தாமதமானாலும் இதழில் இடம்பெறும். பொறுமை காக்காமல் அதையே வேறு இதழ்களுக்கும் அனுப்பினால், அவை வெளிவரும் பட்சத்தில், இதழாளர்களுக்கு மனசங்கடத்தைத் தரலாம். அதனாலேயே தான் மீள வலியுறுத்த வேண்டியுள்ளது.

எமது இதழில் குறைகள் இருந்தால், எமது மின்னஞ்சலில் தொடர்பு கொண்டு தெரிவியுங்கள்! நிறைவாக இருந்தால், உங்கள் நண்பர்களுக்கும் சொல்லி, அவர்களின் ஆக்கங்களும் எம்மிதழை அலங்கரிக்கச் செய்யுங்கள்! இவ்விதழை அச்சில் கொண்டு வருவது நீங்கள் தரும் ஆதரவிலேயே தங்கியுள்ளது.

தொடர்ந்தும் உங்கள் பூரண ஒத்துழைப்பை எம் இதழுக்கு வழங்கி, வெற்றிப்பாதையில் பயணிக்க உதவிக்கரம் நீட்டுவீர்களென நம்புகிறேன்.

வரும் தீபாவளித் திருநாளை கவனமாகக் கொண்டாடி மகிழுங்கள்! மன இருளகற்றி, தீமைகள் நீங்கி இல்லமெல்லாம் புத்தொளியால் நிரம்பட்டும்! அனைத்து வாசக நெஞ்சங்களுக்கும் இனிய தீபத்திருநாள் நல்வாழ்த்துகள்!

நன்றி!

- சித்தி வ.ஃபீரா

# கூட்டம்

(குட்டிக்கதை)

இரவின் முடிவிற்கும் பகலின் துவக்கத்திற்குமான வேளை. புகை மண்டலம் சூழ்ந்ததுபோல் வானம். பறவைகளின் சப்தம், சூரியனுக்கு மட்டும் தாமதமாக கேட்கிறது. சாலையோரத் தள்ளுவண்டி கடைகளுக்கு மட்டும் முன்கூட்டியே கேட்டிருக்கிறது. எல்லா வண்டிக்கடைகளிலும் காலை உணவுக்கான வேலை நடக்கிறது. முனியப்பனும் பலகாரம் போட்டுவதற்கு தயாராகிறார்.

''க்கா க்கா க்கா''

காக்கைகளின் கூக்குரல் ஒலிக்கிறது. தள்ளுவண்டிகளுக்கு எதிரே இருக்கும் நீண்ட பாலத்தின் பிடிசுவரில் கிட்டதட்ட ஐநூறு காக்கைகள் வரிசையாக அமர்ந்தி ருக்கும். முதல் போணி செய்வதற்கு முன், ஒவ்வொரு வண்டிக் கடையிலும் வெவ்வேறு உணவுகள் காக்கை களுக்கு கிடைத்துவிடும்.

முனியப்பன் பலகாரங்களை சுட்டுக் குவியலாக்குகிறார். இப்போது இவரின் கைப்பக்குவத்தின் ருசியை அறிய காத்திருக்கிறது காக்கை கூட்டங்கள். செய்திதாளைக் கிழித்து பலகாரங்களின் வகைகளில் ஒவ்வொன்றை எடுத்து பிய்த்து தயாராக வைத்திருக்கிறார். மனைவி வருகைகாக

"க்கா க்கா க்கா"

ஒட்டுமொத்த காக்கைகளும் அதீத சத்ததுடன் தரை இறங்குகின்றன. பத்தடி தூரத்தில் முனியப்பன் மனைவி வருகிறாள்.

''இவ்வளவு நேரம் என்னா பண்ணுனே சீக்கிரம் வரமாட்டியா?'' என முனியப்பன் கேட்க, அவர் மனைவி சொல்கிறாள் ''நான் என்ன சும்மாவா இருக்கேன். எனக்கும் வேல சரியா இருக்கு''

''சரி இந்தா!'' என்று பிய்த்து வைத்திருந்த பலகாரங்களை நீட்டுகிறார். வாங்கியவள் விவசாய நிலத்தில் நெல்மணி தூவுவது போல் தூவுகிறாள் எல்லா காக்கைகளும் இரை எடுக்கின்றன. அந்தக் காட்சியை பார்ப்பதற்கென்றே ஒரு கூட்டம்.அந்தக் கூட்டத்தில் நாள்தோறும் நானும் காத்திருக்கிறேன்.

**- மணவை கார்னிகன்**

## பெண்

நான்குநிலை வாழ்க்கையை
அசல் நகலாய் கடந்து
பிரபஞ்சப் பரிமாணத்தின் பெரும்
புதையலாய் திகழ்ந்து
குறில் ஓசை குணம் கொண்டு
நெடில் நோக்கம் நிற்பவள் பெண்

## மாறுகிறேன்

அடிக்கடி அவள்முன்
அடங்கிப் போகிறேன்
அவைகளில் ஏனோ
தனியே சிரிக்கிறேன்
வெட்கம் அதை நானும்
நிதமும் கொள்கிறேன்
ஏனோ மெதுவாய் இன்று
பெண்ணாய் ஆகிறேன்

பொயட் ராவணா

# வாழும் வகுப்பறை

ஊரடங்கில் பள்ளிகள் மூடப்பட்ட நிலையிலும்
வகுப்பறையின் அகம்புறமென நிரம்பியிருந்தவர்களுக்கு
இன்று வகுப்பெடுத்ததில் நெகிழ்ச்சியெனக்கு

வகுப்பறைச்சாளரத்தினுள் தலைமட்டும் நுழைத்து
பாடம் கேட்கும் கிளைகள்
வாசலில் மொட்டவிழ
காத்திருந்து செவிமடுத்த மலர்கள்

கூடி வாழ்வதலை கூக்குரலிட்டுக்
கற்றுத்தரும் காகங்கள்
சுறுசுறுப்பை மாணவர்களுக்குச்
சொல்லித் தரும் சிட்டுக்குருவிகள்

மதிய உணவைப் பகிர்ந்து
மகிழும் மைனாக்கள்
நாங்களும் நடைபயிலுவோம்
வரிசையாகவேயென
நேர்சீர் கட்டிச் சென்ற எறும்புகள்

தலையசைத்து உம் கொட்டும் மரங்கள்
கை கால்களை அசைத்து கவிபாடிய செடிகள்

கண் சிமிட்டி புன்னகை பூத்த பூக்கள்
கைதட்டி விசிலடித்த வண்டுகளென
ஊரடங்கிலும்  பள்ளிகள் மூடப்பட்ட நிலையிலும்
வகுப்பறையின் அகம்புறமென நிரம்பியிருந்த இவர்களுக்கு
இன்று வகுப்பெடுத்ததில் நெகிழ்ச்சியெனக்கு

**- நேசமுடன் ஈசு**

# பொய்யெனப் பெய்யும் மழை

அடிவானம் தொட்டு
ஆழித்தாய் அளித்த
சீதனத்தை
மோகக்குடத்தில் சுமந்து
மலைக்காதலனைத் தழுவி

உடையக் காத்திருக்கும்
எழிலிக்கு கிடைப்பதென்னவோ
மரங்களைத் தொலைத்த
வழுக்கைக் காதலனே!

பசுங்காடுகளில்
சூல் கொண்ட கொண்டல்கள்
இன்று காங்கிரீட் காடுகளினால்
மலடியாகி சுற்றுவதற்கு
மரங்களைத் தேடி
சுற்றியலைகின்றன

குறிஞ்சியை குவாரியாகவும்
முல்லையை உல்லாச
விடுதியாகவும்
மருதத்தை வீட்டுமனையாகவும்
நெய்தலை
குப்பைத்தொட்டியாகவும்
மாற்றிவிட்டு

பருவநிலை மாறிவிட்டதாக,
பருவக்காற்று பொய்த்து விட்டதாக
இயற்கையைச் சாடுகிறீர்கள்

கடவுச்சொல்லை
மறந்துவிட்டு
மழையை தரவிறக்கம் செய்ய
யாகம் வளர்த்து
கடவுளிடம் முறையிடுகிறீர்கள்

பிறழ்ச்சியான அல்காரிதத்தில்
குழம்பிய மழை
கோபத்தில்
தேவையில்லா இடத்தில்
கொட்டிவிட்டும்
தேவையுள்ள இடத்தில்
கொட்டாது கலைந்தும் சென்று
விடுகின்றது

நெற்றியைச் சுருக்கியவாறு
இடுங்கிய கண்களுடன்
வானத்தை தினமும்
அண்ணாந்து பார்த்துக்
கொண்டேயிருக்கிறார்
வண்ணத்துப்பூச்சி விளைவறியா
அப்பாவி விவசாயி!

**- பா.சிவகுமார்**
(சென்னை, இந்தியா)

# இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளும், கண்ணியமும்

- கவித் தாரகை நிப்ரா நிஜாம்
(நீர்கொழும்பு)

பெண்ணாகப் பூமியில் பிறக்கும்
போதே உரிமை பெற்றவளாக
உயர்வான தகுதியோடு உலகைக்
கண் திறந்து பார்க்கிறாள்

அல்லாஹ்வின் படைப்பில் அவள்
அப்படித்தான்.ஆண் ஆதிக்கத்தாலும்
அதிகார வர்க்கத்தாலும் அடிமை
விலங்கிட்டு அடக்கி ஆண்டாலும்
இஸ்லாமிய வரையறைக்குட்பட்டு
அவள் தன் உரிமையைப் பெற்றிட
இஸ்லாமிய மார்க்கத்தில் வழியுண்டு.

பெண்ணவளைப் பேதை என்றும்
இன்பமெனும் போதை என்றும்
எண்ணி அவளை இழிவுபடுத்தி
எள்ளிநகையாடிய சமூகத்தில் அவள்
அழகுப் பதுமையல்ல அனைத்து
உணர்வுகளுமுள்ள உயிருள்ள ஜீவன்
என்றும் ஆணுக்குத் துணையாக
அல்லாஹ்வின் படைப்பில்
பெருமைக்குரியவள் என்றும்
பிள்ளைகளைப் பெற்றெடுக்கும்
இயந்திரமல்ல அவள் என்றும்,
பாசத்தோடு ஈன்றெடுத்த பிள்ளைக்கு
தன் இரத்தத்தை பாலாக்கி
கொடுத்து, நல்லொழுக்கத்தோடு
வளர்த்தெடுக்கும் அன்பான
தாய் என்றும் பெண்ணவளை
பெருமைப்படுத்தியது எமது
இஸ்லாமிய மார்க்கம்.

பெண் குழந்தை பிறந்துவிட்டால்
உயிரோடு புதைப்பதும்,
பணத்திற்காக அவளை பேரம்
பேசிய அன்றைய சமூகத்திலும், கண்
திறந்து பார்க்கும் முன்பே கள்ளிப்
பாலை பருகக் கொடுத்து உயிரைப்
பறிக்கும் இன்றைய சமூகத்திலும்
பெண் அடிமை என்ற முத்திரை
பதிக்கப்பட்டவளாய் அவள் வாழ்வு.

பெண்ணுக்கு கல்வியுரிமை வழங்கி
அவள் உரிமை எதுவென விளக்கி,
அறியாமை இருளை விட்டும் நீக்கி
அவள் பெருமை எதுவென்றும்

அவள் சக்தியை அவளுக்குணர்த்தி,
பெண்ணை கண்ணியப்படுத்தியது
எமது இஸ்லாமிய மார்க்கம்.

பெண் எனப் பூமியில் பிறந்து
பேரழகியென வரம் பெற்று,
கற்றவளாயினும் வலிமை
பெற்றவளாயினும் கடன் பட்டு காடு
களனி விற்று, கல்யாண சந்தையிலே
விலை போனாலும் சீதனக்
கொடுமையால் விளக்கில் வீழ்ந்த
விட்டில் பூச்சிகளாய் பெண்ணின்
வாழ்வு ஆனபோதும் பெண்ணை
பெண்ணாய் மதித்து அவள் மனம்
அறிந்து மஹர் கொடுத்து மணம்
முடிக்கும் உரிமையை பெண்ணுக்கு
வழங்கி அவளின் உரிமையை
நிலை நிறுத்தி அவளை பெருமைப்
படுத்தியது எமது இஸ்லாமிய
மார்க்கம்.

அன்பின் பிறப்பிடம் பண்பின்
இருப்பிடம் பாசத்தின் உறைவிடம்
இவையெல்லாம் பெண்ணின்
பெருமையென அவள் புகழ்
பாடுகிறது இந்த மண்ணுலகம்!

பொன் விலங்கு பூவிலங்கு என
அவள் கைகளுக்கு மட்டும் அடிமை
விலங்கு! அவளின் அடிமை விலங்கை
உடைத்தெறிந்து பெண்களுக்கும்
பேச்சு சுதந்திரம் வழங்கி அவள்
எண்ணங்களுக்கு மதிப்பு கொடுத்து
அவள் விரும்பி மணம் புரியவும்
விரும்பாத மணவாழ்வை ஷரிஆ
சட்டத்தை பேணி விலக்கிக்
கொள்ளவும், அவளுக்கான
உரிமைகளைக் கொடுத்து
பெண்ணை பெண்ணாக பார்த்தது
எமது இஸ்லாமிய மார்க்கம்.

கணவன் இறந்து விட்டால் உடன்
கட்டை ஏறும் அவலம் பெண்ணின்
நிலையென, முற்காலத்தில்
வேறு சமூகத்தின் நிலையாகக்
காணப்பட்டாலும், கணவனை
இழந்த விதவைக்கும் மறுவாழ்வு
கொடுக்கும் வாழ்க்கை நெறியும்
விதவை மறுமணம் புரியும் உரிமை
பெற்றவளாய் வழிவகுத்து தந்தது
எமது இஸ்லாமிய மார்க்கம்.

பூட்டிய வீட்டிற்குள் புழுதி படிந்த
வீணையாய் புலம்பலாய்ப் போனது
அவள் நிலைமை. வளைந்து
வளைந்து அவள் வாழ்வும்,
கேள்விக்குறியான போதும்
சமைக்கின்ற கரங்களும் சரித்திரம்
படைத்திட பெண்ணே உன்
மௌனத்தைக் கலைத்து விடு!
ஊமை கண்ட கனவாய் கண்ணீரால்
கதை சொன்னதும் போதும்! கண்ணீர்
உன் ஆயுதம் அல்ல. கருத்தை
கூறும் உரிமை உனக்குண்டு என
அவளுக்கான விழிப்புணர்வை
கொடுத்து, இஸ்லாமிய
வரையறைக்குட்பட்டு அவளை
சுதந்திரமாக செயற்பட வைத்தது
எமது இஸ்லாமிய மார்க்கம்.

பெண்ணின் தரத்தை பெண்ணே
அறியாது கனவுலகிலே விழித்து
கனவுகளிலே லயித்து கனவாகிப்
போனதே அவள் வாழ்வு! நீயும்

இந்த உலகில் சுதந்திரமாக வாழ தகுதியுள்ளவள் என அவளுக்கே உணர்த்திட ஷரிஆ சட்டதிட்டங்களையும் வகுத்து தந்துள்ளதே எமது இஸ்லாமிய மார்க்கம்.

நம் இஸ்லாமிய சரித்திரத்தையும் புரட்டிப் பார்! பெண்களின் பெருமைகளையும், அவர்களின் தியாகங்களையும் கதை கதையாய் கூறும்! சிறந்த பெண்மணிகளையும் அவர்கள் போற்றப்பட்டதையும், பெருமை படுத்தப்பட்டதையும் சொல்லும் எமது இஸ்லாமிய மார்க்கம். உனக்காகவும் உன் உயிரைக் காத்துக் கொள்ளவும், உன் உரிமைக்காக போராடவும் நீ தன்மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்கவும் சமூகப் பணியில் ஈடுபடவும், கல்வியை கற்று கற்பிக்கும் துறையிலும் ஷரீஆ சட்டத்தை பேணி சுதந்திரமாக செயற்பட வழிவகுத்து தந்துள்ளதே எமது இஸ்லாமிய மார்க்கம்.

இன்னும் என்ன தயக்கம்? எழுந்து வா பெண்ணே! பெண்கள் மார்க்கக் கல்வியை முறையாகக் கற்று, இஸ்லாமிய ஷரிஆ சட்டத்தைப் பேணி, பெண் இனத்துக்கே பெருமை சேர்த்து உன்னுரிமையைக் காத்திட விழித்தெழு பெண்ணே!

நாளைய விடியல் நமக்கென விடியட்டும். நாளைய சந்ததிக்கு நல்வழி காட்டிச் சென்றிடு!

# தன்முனைக் கவிதைகள்

ஊடுருவிய சலனங்கள்
உதிர்க்கும் இறகுகள்
உயிர்மை நிழலாகிறது
தனிமையின் விருட்சம்

**

தூண்டிலில் சிக்காது
திசைமாறி நீந்துகின்றன
குழம்பிய குட்டையில்
துள்ளிய மீன்கள்

***

இலகுவாய் தொலைத்தலும்
மீட்டு எடுத்தலுமாக
சுழற்றிக் கொண்டேயிருக்கிறது
காலத்தின் சதிராட்டம்

***

உள்ளுக்குள் ஊடுருவி
நீளும் அமைதி
உண்மையை வெளிச்சமிடும்
அசைவில்லாத சுடர்

***

துரோகக் காற்றில்
மூச்சு முட்டுகிறது
சுயநலக் கூடுக்குள்
முடங்கியப் பறவை இசைக்கிறது

**அன்புச்செல்வி சுப்புராஜூ**

# திணைக்கூ
# ஹைக்கூ கவிதைகள்

## மருதம்

■
அறுத்த நெல்
வீட்டில் குவிந்து கிடக்கிறது
வாங்கிய கடன்

■
பசுமை நாற்றுகள்
இடைவெளி இல்லாமல் நிற்கின்றன
நடவுப்பெண்களின் கால்கள்

■
வரப்பில் மூலிகைச் செடிகள்
வளர்ந்துப் பெருகி உள்ளன
வயல் நண்டுகள்

## பாலை

■
பாலைவன மணல்வெளி
பார்க்க அழகாக உள்ளது
காற்று வரைந்த ஓவியம்

■
பாலை நிலம்
ஏற்றமாய் இறக்கமாய் இருக்கிறது
ஒட்டகத்தின் முதுகு

■
பாலைவனச் சோலை
இனிமையாய் இருக்கிறது
ஒட்டகங்கள் ஊர்வலம்

## முல்லை

■
இருளடர்ந்தக் காடு
விட்டு விட்டுக் கேட்கிறது
யானையின் பிளிறல்

■
விலங்குகளின் எச்சம்
உரமாக மாறும்
பழுத்த இலைகள்

■
வழிதொலைத்த காடு
பயத்தைப் போக்குகிறது
பறவைகளின் இன்னிசை

## நெய்தல்

■
கரைகடந்த புயல்
சாலையில் படிந்து இருக்கிறது
கடற்கரை மணல்

■
கொதிக்கும் கடல்
மிதந்து வருகிறது
மீனவர் உடல்

■
ஆழிப் பேரலைகள்
வேகமாக வருகின்றன
மீன்பிடிப் படகுகள்

## குறிஞ்சி

■
படிக்கட்டு விவசாயம்
பசுமையாக இருக்கிறது
மலைச் சரிவு

■
மலைக் குன்றுகள்
கிராமத்தைச் சூழ்ந்துள்ளன
தென்னந் தோப்புகள்

■
தேயிலைத் தோட்டங்கள்
ஆங்காங்கே வளர்கின்றன
கஞ்சா செடிகள்

கவிஞர்
**கவி நிலா மோகன்**
(தஞ்சாவூர் - தமிழ்நாடு)



# சேரநாட்டு நங்கை

**நூல் விமர்சனம்**


## இராமநாதன்
சென்னை





எந்தச் சரித்திரக் காலத்தைச் சொல்லப் போகிறோம்... அதை எப்படி எழுத வேண்டும் என்கின்ற சூட்சுமம் தெரிந்து அதை வாசகர்களுக்கு நயம்படக் கொடுத்து தனது மூன்றாவது வெற்றிக் கனியை பறித்துக் கொண்டு சென்றிருக்கிறார் எழுத்தாளர் திரு. அனுராஜ் அவர்கள்.

“பாண்டியர் ஐவர்” எனப் பிற நாட்டவரும் அழைக்கக் கூடிய இவர்களைப் பற்றி சரித்திரப் புதினம் எழுதும்போது சற்றே சோர்வு ஏற்படுவது இயல்பு தான்.

ஆனால் அனுராஜ் அவர்களின் கதை பயணிக்கும் வேகமானது சர சரவென்று புயலைப்போல அப்படி ஒரு வேகம்....!! சின்னச் சின்ன அத்தியாயமாய் அவர் எழுதும் பாணி வித்தியாசமானது.

கதையில் கொட்டிக் கிடக்கும் முத்துக் குவியல்களாய் சில சுவாரஸ்யமான இடங்கள்.....வாசகர்களின் பார்வைக்காக .....

தமிழகத்தில் பாண்டிய நாட்டின் முத்தும், சேர நாட்டு மிளகும் வணிகத்தில் பெரும் பங்கு வகித்ததை..

“யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும் ...”

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அந்நாளில் யவனர்கள் பொன்னோடு வந்து மிளகோடு பெயர்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

வைர வேட்டை...

வாரங்கல்லின் ஓங்கி உயர்ந்த மலைப்பிரதேசங்களும் மலைகளை

ஒட்டியமைந்த கிடுகிடுவென்ற பள்ளத்தாக்குகளும் படு பயங்கரமானவை… ஆனால் அந்த பயங்கரப் பூமியில் தான் வைரங்கள் காலங்காலமாய் மலைப்பாறைகளில்படிந்து போய் காணப்படுகிறது .மழைக் காலங்களில் அருவிகளில் பெருக்கெடுக்கும் வெள்ளம் மண் பாறை இவைகளோடு வைரப் படிவங்களையும் உருட்டிக்கொண்டு வந்து பள்ளத்தாக்குகளில் சேர்ப்பித்து விடும். மனிதர்கள் எளிதில் இறங்கிச் செல்லவோ மீண்டும் மேலேறி வரவோ இயலாது…

படிந்திருக்கும் வைரம் கதிரவனின் வெளிச்ச முகம் பட்டு இலேசாய் கண் சிமிட்டத் துவங்கும்.

அரசின் உதவியோடு மலைவாசிகள் பெரிய பெரிய மாமிசத் துண்டங்களைக் குறுதியில் தோய்த்து மலை உச்சியிலிருந்து பள்ளத்தாக்கில் வீசி எறிவார்கள். வீசப்படும் துண்டுகளில் உள்ள பிசுபிசுப்புத்தன்மையால் மின்னிக் கொண்டிருக்கும் வைரங்கள் ஒட்டிக் கொள்ளும். அதனை வளர்ப்புக் கழுகுகள் மூலம் மாமிசத் துண்டுகளை மேலே எடுத்து வரச் செய்வர். மலைக் கழுகுகளுக்கு பயிற்சிகள் தரப்பட்டு வளர்க்கப்படுகின்றன. மாமிசத் துண்டில் ஒட்டிக் கொண்டிருக்கும் வைரமானது… முறையாகச் சேகரிக்கப்படும்….!!!.

ஹொய்சளர்களின் தலைநகரமான «துவாரசமுத்திரம்» மாவிக்கபூரின் படையெடுப்பால் சிதைந்து போனது. அதன் பின் இதனை» ஹளேபேடு» என்றே அழைத்தனர். «ஹளேபேடு « என்றால் கன்னடத்தில் சிதைந்த நகரம் என்று பொருள் .

''வரலாற்று ஆசிரியன் ஒரு வரையறைக்குள் நின்று விடமாட்டான்''

மிகச்சரியாகச் சொல்லப்பட்ட சூத்திரம் இது.

நிலமங்கையை மெல்ல நெருங்கிய வீரபாண்டியன் « மங்கை…நீ ஏனோ இப்போதெல்லாம் நாழிகைக்கு நாழிகை அழகாகிக் கொண்டே வருகிறாய் «» என்றான்.

''எப்போதும் போலவே தான் இருக்கிறேன்…உங்களது பார்வைதான் இப்போது பொல்லாததாக இருக்கிறது'' என்று சொல்லி மோகனமாய்ச் சிரித்தாள் நிலமங்கை.

மாலிக்கபூரோடு சமாதானம் பேசுவதற்கு வீரபாண்டியன் அழைத்து வந்திருந்த தூதன் சாதாரணமானவனல்ல..!

டில்லி நவாப் 'அலாவுதீன்கில்ஜி'யின் படைத்தலைவனும், மாலீக் கபூரைவிட அரசியல் அறிவிலும் இராஜதந்திரத்திலும் சாணக்கியன் எனப் பெயரெடுத்தவனுமான ''அமீர் குஸ்ரூகான்''..

பாண்டிய நாட்டு நிலவறை தன பண்டாரம் முதன்முறையாக மாலிக்கபூர் பார்வையிட விலங்கிடப்பட்ட ''சுந்தரபாண்டியன்'' முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒவ்வொரு பெட்டியாக நிலவறையிலிருந்து வெளியேற்றி யானைகளிலும் குதிரைகளிலும் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்… !!

சுமாராக 240 டன் தங்கம்....612 யானைகளிலும் 20,000 குதிரைகளிலும் ஏற்றப்பட்டுப் பலத்த பாதுகாவலுடன் மதுரை நகரை விட்டு வடதிசையை நோக்கி நகரத் துவங்கியது......!!!

இதனை மார்க்கோபோலோவும், அலாவுதீன் கில்ஜியும் அவைக்களப் புலவர் ''அமீர்குஸ்ருவும்'' படைப்பில் ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

எந்த ஒரு பெண்ணுக்கும் வரக்கூடாத நிலையிது ......!

ஒருபக்கம் கட்டிய கணவன், மற்றொரு பக்கமோ ஆசையாய் வளர்த்த தந்தை.....!

இருவரும் இரண்டு துருவங்களாய்ப் போர்க்களத்தில்.. ான் யார் பக்கம் நிற்பது ....??

சேர மன்னர் ரவிவர்ம குலசேகரன் திருக்கோவிலூரின் தென்பெண்ணை ஆற்றைக் கடந்து. பாலாற்றினையும் கடந்து காஞ்சி மாநகரின் வேகவதி ஆற்றின் கரையில் தனது படையை நிலைகொண்டு நிறுத்திப் பாசறை அமைத்தான்.

சேருக்கும் பாண்டியருக்கும் நடந்த உக்கிரமான போரில் வீழ்ச்சியைத் தழுவிய சுந்தர பாண்டியன் மெல்லப் பின்வாங்கத் துவங்கினான். அதே வேளையில் அமீர்குஸ்ருவின் படை சேரமானின் படைகளைச் சந்திக்க மீண்டும் உக்கிரமானது போர். இறுதியில் அமீரும் தில்லிக்கே விரட்டியடிக்கப்பட்டான்.. நகரேஷு காஞ்சி என்று புகழப்பட்ட காஞ்சிக் கோட்டையில் விற்கொடி ஏற்றப்பட்டது. சேரமான் ரவிவர்ம குலசேகரன் தென் தமிழகச் சக்கரவர்த்தியாகக் காஞ்சியில் முடி சூட்டிக்கொண்டார்.

சுந்தர பாண்டியனையும் அவனது சகோதரன் வீரபாண்டியனையும் வென்று முகலாயர்களையும் காஞ்சிக்கு வடக்கே விரட்டியடித்த சேரமான்...»» மும்மண்டலச் சக்கரவர்த்தி «» என வாழ்த்துரைக்கப்பட்டார்.

(இதனை காஞ்சி அருளாளப் பெருமாள் கோயில் சாசனமும், பூவிருந்தவல்லி பெருமாள் கோயில் சாசனமும் விவரிக்கிறது. )

''சுந்தர பாண்டியன்» அணிந்திருந்த நகைகளைக் கொண்டு ஒரு பெரிய நகரத்தையே விலைக்கு வாங்கி விடலாம் என்றும் பாண்டிய மன்னர்கள் உருண்ட, திரட்சியான 108 பெரு முத்துக்கள் சேர்த்துக் கட்டிய மாலை அணிந்திருப்பதையும் « மார்க்கோபோலோ பதிவு செய்திருக்கிறார்.

மென்மேலும் சிறந்த சரித்திரப் புதினங்களைப் படைக்க திரு. அனுராஜ் அவர்களுக்கு வாழ்த்துகள். மிகவும் அழகிய ஓவியத்தைக் கொடுத்த ஓவியர் திரு.பிரகாசன் அவர்களுடைய திறமை பிரகாசமாய் ஒளி வீசட்டும் என்று பாராட்டுகின்றேன்.

சரித்திர நூல் எழுத்தாளர்களின் «சரணாலயமாய்» திகழும் கௌரா பதிப்பகத்தாருக்கு வாழ்த்துகள் மற்றும் பாராட்டுக்கள்! ■

# ஆன்மா என ஒன்றுமில்லை

நீண்ட ஆயுள் வாழ்ந்திடவே
நாம் வணங்குகிறோம்,
காலாவதியான தெய்வங்களை.

மனிதனுக்குள் நொறுங்கி
சரிந்துகிடக்கும் நம்பிக்கைகளுக்கு
ஆன்மாவென்றும் பெயருண்டு.

பெயர் சூட்டிய நாங்களோ
பெயரிடப்படாத மடையர்கள்.

அறிவியலை மறுக்கும் ஆன்மீகம்,
ஆன்மாவை வளர்க்க அநாகரீகம்.

இல்லாத ஆன்மாவுக்கு
அமைதி சோம்பேறித்தனம்;
ஆரவாரம் முட்டாள்தனம்

எத்தனை தவமிருந்தாலும்
ஆன்மா என ஒன்றுமில்லை,

இதயமுண்டு மூளையுண்டு
இரண்டிற்கும் இடையே
ஒரு தொடர்புண்டு.

மனித இனம் விழிக்குமென்ற
நம்பிக்கையும் எனக்குண்டு.

- வெ. ஹேமந்த் குமார்
ஈரோடு





# கிறுக்கன் சபையில் கிழவன் குமரனாம்..!

கிறுக்கன் சபையில் கிழவன் குமரனாம்
கண்டோர்  சொல்ல கேட்டு அறிந்ததை
அருமை யாக அரங்கம் கண்டது
அகத்துள் மகிழ்ந்து ஆர்ப்பரித் துமிங்கே
எருமை மேலே எறும்பு ஊர்வதால்
எடையும் குறையும் என்றோர் நாவிலே
கருமை சூழ்ந்தே கவலை யிடுவதால்
கலையா பதிந்தக் கரையும் எளிதிலே!

தாசி கவனம் காசில் உண்டென
தேடிச் சென்றக் கூட்டம் கூவிடும்
பாசி மறைந்து நீரும் தெளிந்திடும்
பாடல் கேட்ட பழைய ஞாபகம்
ஆசி யினையே அருளும் மனிதரே
ஆக்க மழித்தே விழுமே புழுவென!
தூசி யாக பரவும் எண்ணிட
தினமும் வாடல் வாடும் ஏழைக்கே!

சுயத்தை விரும்பும் மனிதர் என்றுமே
சுகமாய் மண்ணில் நிலைத்த தில்லையே!
பயத்தில் மக்களை நடுங்க வைப்பதில்
பலனும் மில்லை என்ற றிந்திடா
சுயம்பி செயல்கள் தொடரவே செய்யுமே
சுகத்தை யளித்து சொர்க்கம் காணுமே
நயந்து போனால் நக்கிக் குடித்திடும்
நாயாய் நம்மை மாற்றி மகிழுமே!

- நா.பாண்டியராஜா
(ஆர்.எஸ்.மங்கலம்)



# பாரியன்பன்
## குறுங்கவிதைகள்

1.

மில்லி மீட்டர் மில்லி மீட்டராய்
என்னைப் பிரித்து மேய்கிறாய்.

ஒவ்வொரு துளியாய்
இடைவெளியின்றி
என்னைக் கோர்த்து முடிக்கிறேன்.

என்னில் ஏதோ ஒரு மிகைமாற்றம்
மின்னி மறைந்த நொடியில்
என் இடப்பக்கம் முழுவதும்
ஆக்கிரமித்திருக்கிறாய்.

அந்நேரம் அர்த்தனாரியாய்
ஆகிக்கிடக்கிறோம் இருவரும்.

2.

இரவை அமைதியிலும்
பகலை இரைச்சலிலும்
பனியைக் குளிரிலும்
கோடையை வெம்மையிலும்
மழையைத் தூறலிலும்
இடி மின்னலைச் சப்தத்திலும்
தென்றலைத் தீண்டலிலும்
பூக்களை வாசத்திலும்
அறிகிறான்
பார்வையில் ஒளியற்ற
ஒருவன்.

3.

என் நடையின்
வேகத்தைக் கூட்ட
மனமில்லை.
என்னைப் பிரிய
மனமின்றி
நிழலாய்ப் பின்தொடர்கிறது
நன்றி மறவா
என் கவிதையொன்று.
ஆதலால்
நடையின் வேகத்தை
சற்றும் கூட்ட மனமில்லை
எனக்கு.

4.

யாரும் பார்க்காத
உன் அந்தரங்க மச்சத்தின்
ரகசியத்தை
கொத்தாகப் பூத்திருக்கும்
வாடாமல்லிச் செடியிடமும்
நேற்று பிஞ்சு விட்ட
தக்காளிச் செடியிடமும்
இன்று புதிதாய் முளைவிட்ட
மிளகாய்ச் செடியிடமும்
கதை கதையாய்
சொல்லிக் கொண்டிருக்கிறது
நீ குளித்து முடித்த
என் வீட்டு கிணற்று நீர்.

- பாரியன்பன் நாகராஜன்

# அன்பு அப்பா

**கே.என். இராமகிருஷ்ணன்**

நேஹாவின் அப்பா எதற்கு என்னைக் கூப்பிட்டிருக்கிறார். அவளைப் பற்றி ஏதாவது தகவல்கள் கேட்பதற்கா? அல்லது அவளது காதல் பற்றியா எனக் குழம்பியவாறே அவருடைய கம்பெனிக்குச் சென்று கொண்டிருந்தேன் நான்.

அவர் பணிபுரியும் வெளிநாட்டுக் கம்பெனியின் பணக்காரத்தனமான வாயில்களைக் கடந்து, அவருடைய அறையை அடைந்தேன். அவர் கொடுத்திருந்த விசிட்டிங் கார்டு எனக்கு உதவியதால்தான் அங்கு செல்ல முடிந்தது. என்னைப் பார்த்ததும் வா காவ்யா, இங்கே உட்கார் என அவருக்கு முன்பிருந்த இருக்கையைக் காட்டினார்.

என்ன அப்பா அவசரமாகக் கூப் பிட்டிருக்கிறீர்களே, என்ன விஷயமாக?

ஒன்றுமில்லையம்மா, நேஹாவின் விஷயமாகத்தான்.

நேஹாவின் விஷயமாகவா?

ஆமாம். அவள் யாரையோ காதலிக்கிறாளாமே, உனக்குத் தெரிந்திருக்குமே.

ஆமாம். உண்மைதானப்பா

அவன் இப்போது இவளைப் பிரிந்து வருத்தத்திலிருக்கிறானாமே, அப்படியா?

ஆமாம். திருமணம் செய்து கொள்ளலாம் என்கிற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். நேஹா அவள் பெற்றோரிடம் அனுமதி பெற வேண்டுமென்றும், அவளுடைய காதலர் வினீத் அவருடைய பெற்றோரிடம் திருமணத்துக்கு சம்மதம் கேட்கவேண்டுமென்றும் முடிவு செய்து முதலில் வினீத் அவருடைய பெற்றோரிடம் சென்று கேட்டிருக்கிறார். தன் காதலின் உண்மைத் தனத்தை அவர்களுக்குப் புரிய வைத்தபோது அவர்கள் அரை மனதுடன் ஒப்புக் கொண்டு பெண்ணைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். பிறகு பெண்ணுக்கு வேண்டிய நகைகளைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். சரி இந்த அளவுக்கு ஒப்புக் கொண்டார்களே என மகிழ்ந்த வினீத் அவர்கள் எழுதித் தந்த நகை லிஸ்ட்டைப் பார்க்காமலே அதை நேஹாவிடம் கொண்டுவந்து கொடுத்தார்.

லிஸ்ட்டைப் பார்த்து அதிர்ந்த நேஹா, என்ன வினீத், இவ்வளவு நகைகளா? ஒட்டியாணம் போன்ற பழமையான நகைகள்கூட லிஸ்ட்டில் இருக்கின்றதே. இதெல்லாம் எதற்கு? நாங்களும் ஏழைகளில்லை. போட வேண்டிய நகைகளை எங்கள் பெற்றோர் போடுவார் களே, பிறகு எதற்கு இந்த நகைக்குவியல் லிஸ்ட் என்று சற்றுக் காரமாகவே கேட்டு விட்டாளாம் வினீத்திடம்.

நான் லிஸ்ட்டைப் பார்க்க வில்லை நேஹா என்றானாம் வினீத்.

ஆமாம், பார்க்காமல் வாங்கி

வந்து விட்டீர்கள். உங்களுக்கு இதில் சம்பந்த மில்லையென்று நான் நினைக்க வேண்டுமாக்கும். எனது காதலர் உண்மைக் காதலர் என்று நினைத்தேனே. இவ்வளவு தானா? என வருந்தினாளாம்.

இது எனக்கும் சம்மதமில்லை நேஹா, நான் அம்மாவிடம் சொல்வேன்

அதெல்லாம் வேண்டாம், நான் வருகிறேன் என்று விருட்டென்று எழுந்து வந்துவிட்டாளாம்.

வினீத்தும் முக வாட்டத்துடன் வீட்டிற்குத் திரும்பினானாம்.

அதன் பிறகு அவன் கூப்பிட்ட போது இவள் போனை எடுக்க வில்லையாம்.

அவனும் வருத்தத்துடன் பேசாமல் இருந்து விட்டானாம். இப்போது பேசுவ தில்லையாம்.

சரி. அவனுக்கு நகைகளின்மீது தான் ஆசையா?

இல்லையப்பா, வினீத் அப்படிப் பட்ட ஆளில்லை. அவர் நேஹாவை உண்மையாய்க் காதலிக்கிறார். அது நேஹாவுக்கும் தெரியும். அவள் இப்போது வருத்தப்படுகிறாள். தான் வினீத்தை மிகவும் மோசமாக நடத்தி விட்டதாக நினைத்து.

நீ சொல்வது சரிதானம்மா. அவள் மிகுந்த வருத்தத்துடன்தான் இருக்கிறாள். சரியாக சாப்பிடுவதில்லை. அவள் தேகம் சற்றே மெலிந்து வருகிறது. எங்களுக்கு அவள் ஒரே மகளம்மா.

அவளுக்குச் செய்யாமல் நாங்கள் வேறு யாருக்குச் செய்யப் போகிறோம். அவள் தேர்ந்தெடுத்திருக்கிற காதலனும் நல்லவன் என்கிறாய் நீ. பிறகென் னம்மா? அவள் ஏன் அப்படிப் பேசினாள். போனது போகட்டும். நாம்அவளுக்கானநகைகளைஅந்தலிஸ்ட்படி வாங்கி வருவோம். அதற்காகத்தான் நான் உன்னை அழைத்தேன்.

ஏனப்பா, நேஹாவையும் கூப்பிட்

# அக்கினிப் பார்வை

உன்னை
விரும்பி நோக்கும்
நொடிகள் தோறும்
என்னை
வீழ்த்தத் துடிக்கும்
உன் விழி அம்புகள்

என்னுள்
ஏவுகணைகளாய்
பாய்ந்து
இம்சிக்கின்றன

என் இனிய பெண்ணே!
உன்னை
சுமந்து நிற்பது
அழகிய முகமா இல்லை
அக்கினிக் குடமா

**- கவி ரசிகன்**

# துளிப்பா

புரியாமல் நான்
சிரித்துக்கொண்டிருந்தேன்.
என் பேனா என்னை
அறியாமல் தன்னை
அழித்துக் கொண்டிருந்தது

* * * * * *

உண்மை செத்த குளத்தில்
பொய்கள் பூத்தன.
பொய்களின் வாசத்தில்
உலகங்கள் மயங்கின...

- இர்ஷாத்

டிருக்கலாமே

இல்லையம்மா, அவளுக்கு சர்ப்ரைசாக இருக்கட்டுமே என்றுதான்.

ஆமாம் அந்த லிஸ்ட்டுக்கு என்ன செய்வது?

அதுபற்றி யோசிக்காமலிருப் பேனா காவ்யா, நான் அவள் வைத்திருந்த அந்த லிஸ்ட்டை அவளுக்குத் தெரியாமல் எடுத்து வந்துள்ளேன். சரி வா போகலாம். என்றவர் என்னையும் அழைத்துக் கொண்டு காரில் நகரின் பெரிய புகழ் பெற்ற நகைக்கடையில் நுழைந்தார்.

அந்த லிஸ்ட்படி எல்லா நகைகளையும், அந்த ஒட்டியாணம் வரை அவர் வாங்கியிருந்தார். மகள்மீது அவர் வைத்திருக்கும் அன்பை நினைத்து நான் ஆச்சரியப்பட்டேன்..

நான் அதை சரி பார்த்தேன். அதில் லிஸ்ட்டில் இருந்த நகைகளும் சரியாக இருந்தன, அதற்கு மேலும் சில நகைகளும் இருந்தன.

சரியாக இருக்கிறதா காவ்யா என்றார்.

சரியாக இருக்கிறது. கூடுதலாக சிலவும் இருக்கின்றனவே அப்பா

கூடுதலாக இருப்பவை நான் பெறாத மகள் காவ்யாவுக்கு என்றார்.

எதற்கப்பா அதெல்லாம்? எங்கள் வீட்டிலும் எனக்கு நிறைய சேர்த்து வைத்திருக்கிறார்கள் என் திருமணத் திற்காக.

இந்த அன்பு அப்பாவின் கிப்ட் ஆக வைத்துக் கொள்ளம்மா என்றவர் சரியம்மா, நாம் காபி சாப்பிட்டு விட்டுப் போகலாம் என அருகி லிருந்த ரெஸ்ட்டாரண்டுக்குள் நுழைந்தார். ஸ்நேக்சும் காபியும் அருந்தியதும் என்னை என் வீட்டருகே விட்டு விட்டு. உனக்கு வாங்கிய நகைகளை இப்போது கொடுத்தால் சரியாயிருக்காது. அவளிடம் கொடுக்கும் போது உனக்கும் உன் கையில் தருகிறேன் என்றவர் சற்று நிறுத்தினார், பிறகு

காவ்யா, வாங்கியவைகளைப் பற்றி நேஹாவிடம் இப்போதைக்கு சொல்லாதே. சரியா என்று கூறிவிட்டுச் சென்று விட்டார்.

அடுத்த நாள் நான் நேஹாவைத் தேடி அவள் வீட்டிற்குச் சென்றேன். அவள் தன் ரூமில் தனிமையில் இருந்தாள். முகம் வாடியிருந்தது.

என்னடி நேஹா, என்ன இது என்றேன்.

ஆமாம் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?

இப்படியே மோட்டு வளையைப் பார்த்து உட்கார்ந்தால் உன் காதல் வெற்றியாகிவிடுமா?

வேறு என்ன செய்யச்சொல் கிறாய்?

நீ வினீத்துடன் போனில் பேசினாயா?

அவர் கூப்பிட்டபோது நான் போனை எடுக்கவில்லை. இப்போது நான் கூப்பிட்டால் அவர் எடுப்பாரா?

காதலர்களுக்குள் இந்த ஈகோ வெல்லாம் வேண்டியதில்லை. நீயாக அவர் எடுக்க மாட்டார் என ஏன் நினைக்கி றாய்? இப்போது பேசித்தான் பாரேன்.

எப்படியடி பேசுவது. நான் அவரை முகத்திலடித்தார்போல் பேசினேனே.

அடிக்கிற கை தான் அணைக்கும் என்கிற பழமொழியெல்லாம் கணவன் மனைவிக்கு அந்தக் காலத்தில் எழுதியது தான். அடிப்பது என்பது சொல்லால் அடிப்பதும் அடி தான் என்னும் போது நீ அதே சொல்லால் இப்போது அணையேன். எல்லாம் சரியாகிவிடும் என்று அவளை உசுப்பினேன்.

சற்றே தயக்கத்துடன் நேஹா அலைபேசியை எடுத்து எண்களை அழுத்தி அவள் காதுக்குக் கொடுத்தாள்.

நான் இருக்கலாமா நேஹா? நான் போகட்டுமா என எழுந்தேன்.

நீ இரு. என்றவள் அலைபேசியில் வந்த குரலால் மெய் மயங்கி அதில் கவனம் செலுத்தினாள். பிறகு மெல்ல பேசினாள்

வினீத் நான் அன்று கொஞ்சம் கடினமாகப் பேசிவிட்டேன்.

இல்லை நேஹா, நீ சொன்னது எல்லாம் சரி தான்.

அப்படியென்றால் நீங்கள் ஏன் என்னுடன் பேசவில்லை? போன் செய்த துடன் நிறுத்திவிட்டீர்கள். என்னைப் பார்த்திருக்கலாமே.

அதெல்லாம் போகட்டும். உனக்கு ஒரு நல்ல செய்தி வைத்திருக் கிறேன்

எனக்கு நம் காதல் கைகூடுவதை விட நல்ல செய்தி என்று ஏதுமில்லை

காதல் கைகூடுகின்ற செய்திதான்.

என்ன சொல்கிறீர்கள்?

ஆம். இன்று காலையில் உன் அப்பா வந்திருந்தார் எங்கள் வீட்டுக்கு.

என் அப்பா வந்திருந்தாரா?

ஆம். வந்தவர் என் பெற்றோ ரிடம் பேசினார். என் பெண் வினீத்தை விரும்புகிறாள். அவள் எனக்கு ஒரே பெண் தான். அவளுக்கு வேண்டிய நகைகளை நான் வாங்கி வந்திருக் கிறேன். பூ பழங்களோடு பெண் கேட்க நீங்கள் வருவதற்குப் பொறுமையில்லாமல் நான் நகைகளுடன் வந்திருக்கிறேன். நகைகள் நன்றாயிருக்கின்றனவா? பாருங் கள். நீங்கள் எப்போது எங்கள் வீட்டிற்கு வருகிறீர்கள். திருமணத்தையும் கிராண் டாகப் பண்ணுகிறேன். உங்களுக்கு சம்மதம் தானே என்று பேசிக் கொண்டே சென்றார். இதற்கிடையில் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த என் அப்பா அந்த நகைகளை யெல்லாம் பார்த்தவர் கமலம் நீ கேட்ட அத்தனையும் இதில் இருக்கிறது. உனக்கு இப்போது சம்மதம்தானே என்றார்

# பிண நடுகை



மரங்களை நடுவோம்
மண்காப்போம் எனும் காலம் போய்
பிணங்களை நட்டு
மனம் பதறி நிற்கிறோமே !

கொத்துக்கொத்தாய் குவியும்
கொலைகளின் மர்மம் என்ன?
கொடிய நோய் வந்து
குலைநடுங்க வைத்திங்கு
குதறிடும் மர்மம் என்ன?

நாற்று மேடையிட்டு
நல்ல பயிர் நடுவது போய்
நாறிய பிணங்களாய் நாமிங்கு
நடும் மர்மமென்ன

யார் மீது குற்றமிது
யார் தந்த சாபமிது
யாசித்து நிற்கிறோமே
யாசகராய் நாமிங்கு!!

எங்கிருந்து வந்தாய் நீ
ஏனிந்த குரோதம் உன்னுள்
எமனையும் மிஞ்சி விடும்
எச்சினியாய் நீ இங்கே
எடுத்திருக்கும் பிறப்பென்ன?

அலை அலையாய் வந்து
அதற்கு வேறு பெயரும் தந்து
ஆவேசம் கொண்டெம்மை
அடித்து தாக்கும் மர்மம் என்ன?

கொரோனா என்பதா உனை
கொடும் அரக்கன் என்பதா
கோதாரி பிடித்திங்கு
கோரத்தாண்டவம் ஏன் உனக்கு?
கொஞ்சமாவது குறைந்திட மாட்டாயா?
குலைந்து நிற்கும் எங்களை
கூடி வாழ விடமாட்டாயா?

**- ஜெயா**

இல்லைங்க என்று சொல்லும் போதே என் அம்மாவின் கண்களில் நீர் வழிந்தது. நம் ஒரே மகனின் விருப்பத்தை காலிலிட்டு நசுக்க இருந்தேன். அவனுடைய சோக முகம் என்னை வாட்டியெடுத்து விட்டது. எனக்கு இந்த நகைகள் எல்லாம் வேண்டாம். அவர்கள் பெண் மட்டும் போதும். என் மகனின் முகத்தில் சிரிப்பு வந்தால் போதும். நேஹா அப்பாவைப் பார்த்ததுமே அவன் முகம் மலர்ந்ததைப் பார்த்தேன் நான் என்று மீண்டும் அழுதாள்.

இந்த நகைகள் எங்களுக்கு வேண்டியதில்லை சம்பந்தி, உங்கள் பெண் எங்கள் வீட்டுக்கு வந்தால் போதும் என்று என் மனைவியே சொல்லிவிட்டாள். என்று நகைகளை எடுத்து உன் அப்பாவின் கைகளிலே கொடுத்தார் என் அப்பா.

இல்லைங்க. நீங்கள் சொல்லி யதற்காக இதை வாங்கியதாக நினைக்கா தீர்கள். இது நான் எப்படியிருந்தாலும் என் பெண்ணுக்குச் செய்வதுதான். வேண்டுமானால் அன்றைய தினம் போட்டு அனுப்புகிறோம். அதனால் நான் இதை எடுத்துச் செல்கிறேன். நீங்கள் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டதைக் கேட்டால் என் மகள் மிகவும் சந்தோஷ மடைவாள். அதுபோதும் எனக்கு,

நாங்கள் இன்று மாலையே உங்கள் வீட்டிற்கு வருகிறோம்.

மகிழ்ச்சி. நீங்கள் வாருங்கள் என்ற உன் அப்பா காரில் ஏறினார் மகிழ்ச்சி யோடு. நான் மாலை அங்கு வருவேன் உன் ஆசை முகத்தைப் பார்க்கப் போகிறேன். சரிதானா நேஹா என்று சிரித்தான். நேஹாவும் கூடச்சேர்ந்து சிரித்தாள்.

என்னடி சிரிக்கிறாய்? என்னாச்சு என்றேன் நான்.

வினீத் பேசியவைகளை அப்படியே என்னிடம் சொன்னாள்.

கங்கிராகுலேஷன்ஸ் என்றேன் நான். இன்னுமொரு செய்தி உனக்கு,

என்ன உனக்கும் கல்யாணமா?

அதில்லை, எனக்கு என் அத்தை மகனிருக்கிறார். நானும் அவரைக் காதலிக் கிறேன். அது வேறு, உன் அப்பாவும் நானும் நேற்று நகைக் கடைக்குப் போயிருந்தோம். அது தெரியுமா? உனக்கு

என்னடி இது இன்று ஒரே சந்தோஷச் செய்திகளாகவே வந்து விழுகின்றன.

நானும் உன் அப்பாவும் உனக்கு வேண்டிய நகைகளை வாங்கினோம்.

என்ன சொல்கிறாய் நீ?

நீ வைத்திருந்த உன் நகைகள் லிஸ்ட்டை அப்பா எடுத்து வந்திருந்தார். அவர் அதையெல்லாம் பார்த்து என்னை யும் பார்க்கச் சொல்லித் தான் நாங்கள் வாங்கினோம்.

அந்த நகைகளைத் தான் அப்பா கொடுத்தாரா?

ஆமாம். அங்கேயும் பாசப் போராட்டம் தான் வென்றது. உன் அப்பா எனக்கும் சில நகைகள் வாங்கியிருக்கிறார். உன்னைத் தோழியாய்ப் பெற்றதில் எனக்குக் கிடைத்த பரிசு அது. உன் அப்பாவின் அன்பு, அதுவும் உன்மேல் அவர் வைத்திருக்கும் அன்பு அளப்பரியது நேஹா.

ஆமாம், அதற்கு நான் கொடுத்து வைத்திருக்கிறேன் என் அப்பாவின் அன்பு போல் எல்லா அப்பாக்களும் இருந்தால் காதல் எப்போதுமே தோல்வியடையாது தானே.

ஆமாம். நீ சொல்வது நூற்றுக்கு நூறு சரி என்றாள். இருவரும் சேர்ந்து சிரித்தோம்.

# விடியும் வரை காத்திரு

வலிகள் இல்லாமல்
வாழ்க்கையில்லை..
வருத்தப் படுவதால்
பயனேதுமில்லை...

துன்பத்தைக் கண்டு
ஓடக் கூடாது..
துணிந்து நின்றால்
தோல்வி கிடையாது...

சுடுகிறது என்பதால்
சூரியனைச்
சுட்டு விடுகிறோமா..?

குளிர்கிறது என்பதால்
நிலவை
உடைத்துப்
போடுகிறோமா..?

கசக்கிறது என்பதால்
மருந்தைத்
தூக்கி எறிகிறோமா..?
இனிக்கிறது என்பதால்
தித்திப்பைத்
தொடர்ந்து உண்கிறோமா..?

இல்லை தானே - பிறகு
உனக்குள்
குழப்பம் எதற்காக..?
இன்பம் துன்பம்
கலந்ததே வாழ்க்கை..
இதை நீ
உணர்ந்து கொள்வதே
உனக்கு நன்மை...

விடியும் வரை
பொறுமையாய்க் காத்திரு..
விரைவில் எல்லாம்
சரியாகும் நம்பிடு.....

**- பாக்யபாரதி**
(தருமபுரி, தமிழ்நாடு)

# குறுங்கவிதை

நிலா
கடலோடு விளையாடும்
திங்களே - நின்
காதலன் விழியொடு
ஒருகணம் பேசடி

என்பிறவி பயனடைய
ஒருவழி சொல்லடி
வெண்ணிற மங்கையே!
சந்திரமதியெனும்
நாமம் கொண்டவளே

நின்னை வர்ணிக்க
வார்த்தைகள் இல்லையடி
மதியழகே...!!

**- பத்மாவதி கிருஷ்ணா**

# மேன்சன் அறை

கலைந்துக்கிடக்கும் ஆடைகள்
நடுவே சீட்டுக்கட்டு.

காற்றில் அசைந்தாடும்
சிகரெட் புகையை
தாண்டிச்செல்லும் ஒளி
தொலைக்காட்சி நிகழ்ச்சியில்
ஆன்மீக சொற்பொழிவு.

டவல்துண்டு கொடியில்
அசைந்தாடி அறைமுழுக்க
பரப்பிவிடுகிறது மின்விசிறி
ஷாம்பு வாசம்.

*- சாயிராம்.*

# துளிப்பாக்கள்

கலைந்து போனது
காற்றோடு கொஞ்சல்
கூடிய மேகங்கள்

தாமதிக்கும் மழை
ஆர்ப்பரிக்கும் அலை
தத்தளிக்கும் உலை

வீழ்கின்ற மழைத்துளியை
அலகால் கொத்தியது
கிளையில் நடுங்கும் பறவை

அள்ளிய குப்பையில்
அமர்ந்து செல்கிறார்
குப்பைத் தொழிலாளி

சரிந்த மூங்கில்
சிரித்து ஒலிக்கிறது
புல்லாங்குழல்

புத்தகம் பிடித்த கைகள்
முழம் அளக்கிறது
பூ விற்கிறாள் சிறுமி..

அரசமரத்தில்
இடம் வாங்கியது
ஊர்சுற்றிய பறவைகள்...

ஏழையின் வீட்டில்
குதித்து விளையாடுகிறது
பசி

கல்லடி வாங்கியதும்
சிரிக்கிறது
குளத்திற்குள் நிலவு

கடைவாயிலில் எறும்புகள்
வரிசையாய் வந்து இறங்கும்
சர்க்கரை மூட்டைகள்

விவசாயி நிலத்தில்
நடப்பட்ட விளம்பர பலகை
இடம்  விற்பனைக்கு

இறுதி நடனம்
உயிர் பறித்த காற்று
அணையும் விளக்கு

அலையைத்தேடி
அயர்ந்து போகின்றன
தொட்டி மீன்கள்

தொட்டிச் செடியில்
புதிய வரவு
பறவையின் எச்சங்கள்

வறுமையோடு
எரிந்து கொண்டிருக்கிறது
பசியில் குடிசை

திருவிழாவில் சலசலப்பு
தலை துண்டிப்பு
வேண்டுதலாய் ஆடுகள்

**- ஞா.முனிராஜ்**

(அருப்புக்கோட்டை)

# ஈகோவைத் துறந்தால் வழி கிடைக்கும்

ஒரு பெரிய கார் கம்பெனியில் ஒரு இளைஞன் வேலைக்கு சேர்ந்தான். படுசுட்டி மட்டுமல்ல புத்திசாலியும் கூட.. சில காலம் கழித்து அவன் தானே ஒரு காரை வடிவமைத்தான்.. அதை அவனின் மேலாளரிடம் காண்பித்தான்..

அற்புதம் என்றார் மேலாளர்..

இதுபோல் எந்த கம்பெனியும் தயாரிக்க வில்லை.. உடனே காரை உருவாக்குவோம் என்று அந்த கம்பெனி முதலாளியின் அனுமதியோடு காரை தயாரித்தனர்.

முதலாளிக்கு மிகுந்த சந்தோஷம்.. முதல் கார் கண்ணை கொள்ளை கொண்டது.. அனைவருக்கும் மகிழ்ச்சி..

காரை மார்க்கெட்டிங் பிரிவுக்கு எடுத்து செல்ல முற்படும் போது தான் தெரிந்தது..

காரின் உயரம் வாயிலின் உயரத்தைவிட ஒரு இன்ச் அதிகம்..

இளைஞன் சோர்ந்தான்.. தன்னையே நொந்து கொண்டான்..

ஆளாளுக்கு ஐடியா கொடுக்க ஆரம்பித்தனர்..

வாயிலின் மேற்பகுதியை உடைத்து விட்டு காரை வெளியே எடுத்து விடலாம்.. பின்னர் சரிசெய்யலாம் என்றார் மேலாளர்..

காரை கஷ்டப்பட்டு இருக்கும் வாயில் வழியே எடுத்து செல்லலாம்.. மேற்பகுதியில் கீறல்கள் ஆகும்.. அதை பெயிண்டிங் மூலம் சரிசெய்யலாம் என்றார் பெயிண்டர்..

முதலாளிக்கு மனது ஒப்ப வில்லை.. புது காரின் மீது கீறல்களை நினைக்கவே அவருக்கு முடியலை..

அனைவருக்கும் குழப்பம்.. முகத்தில் ஏமாற்றமும் வெறுமையும் ..

இவ்வளவு அழகான புது வடிவமைப்புடன் உருவாக்கிய காரை வெளியே கொண்டு செல்ல முடியலையே.. இவை அனைத்தையும் கவனித்து கொண்டு இருந்த வயதான வாட்ச்மேன் தயங்கி தயங்கி முதலாளியிடம் «ஐயா.. நான் ஒன்று சொன்னால் கேட்பீர்களா? அனுமதி உண்டா?» என்றார்..

அனைவருக்கும் ஆச்சரியம்.. இந்த கிழவன் என்ன சொல்லப்போகிறான் என்று..

ம்….. சொல்லு.. சொல்லு..

வாயிலின் உயரத்தைவிட ஒரு இன்ச் தான் கார் உயரம் அதிகம்.. காரின் நான்கு டயர்களின் காற்றை இறக்கி விட்டால் காரை சுலபமாக வெளியே எடுத்து விடலாம்.. பின்பு காற்றை நிரப்பிக் கொள்ளலாம்..

அடடே.. எவ்வளவு சுலபமான வழி.. எந்த சேதமும் இன்றி..

வாழ்க்கை மிக சுலபமானது.. வாழ்வது ஒரு முறை.. அதை அனுபவியுங்கள்..

ஒரு இன்ச் உயரம் போலவே ஒரு இன்ச் ஈகோ & ஒரு இன்ச் கோபம் என எல்லாவற்றையும் டயரிலிருந்து காற்றை கழட்டி விடுவதைப்போல் கழட்டி எறியலாம் தானே..

- திருஞானம்

# வாழ்தல் இனிது

- நிஷா ரஹ்மான்



இறைவனால் நமக்கு தரப்பட்டிருக்கும் மூன்றாம் கை தான் 'தன்னம்பிக்கை'...
"எடுத்த காரியம் யாவினும் வெற்றி, எங்கு நோக்கினும் வெற்றி"
- பாரதி.

நம்பிக்கை நார் மட்டும் நம் கையிலிருந்தால் உதிர்ந்த பூக்களும்வந்து ஒவ்வொன்றாய் ஒட்டிக்கொள்ளும்

முயற்சி திருவினையாக்கும்; என்றார் ஈராயிரம் ஆண்டு களுக்கு முன்பே திருவள்ளுவர்.

முயற்சியும் பயிற்சியும் கொண்டு தன்னம்பிக்கை என்னும் திறவுகோலால், வெற்றியெனும் கதவினை திறக்கலாம். வானம்பாடியாய் வானில் பறக்கலாம்.

தன்னம்பிக்கை என்பது ஒரு நாளில் உதிர்ந்துவிடும் பூவாக இருந்து விடக்கூடாது. மேலும் மேலும் மலரை உருவாக்கும் செடியாக இருக்க வேண்டும்

மண்ணில் விதைத்த விதை முதற்கொண்டு, விண்ணில் பறக்கும் பறவைகள் வரை அனைத்து உயிரினங் களின் உடலோடு ஒட்டியது தன்னம்பிக்கை.

உயர வேண்டிய ஒவ்வோர் உயிரி னத்திற்கும் வேண்டியது தன்னம்பிக்கை.

போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில் தன்னம்பிக்கையோடு ஒவ்வொரு நாளின் விடியலையும் யார் எதிர் கொள் கிறார்களோ, அவர்களுக்கே உண்மை யான விடியல் கிடைக்கிறது.

விடியும் என்று விண்ணை நம்பும் நீ.. முடியும் என்று உன்னைநம்பு...

புதைக்கப் படவில்லை;
விதைக்கப்படுகிறோம் என்றுணர்ந்த
விதை இருளுக்கு அஞ்சாது.

ஒதுக்கப்படவில்லை; செதுக்கப்
படுகிறோம் என்றுணர்ந்த மனம்
தோல்விக்கு அஞ்சாது.

தன்னம்பிக்கையோடு போராடி தோல்வியைத் தழுவினாலும், ஒருவன் தோளில் அமரும் தோல்வி வெற்றிக்கு அருகில் வீறுநடையிட்டுக் கொண்டி ருக்கிறது என்றுதான் அர்த்தம்.

ஒரு பறவை மரத்தின் கிளை யில் அமரும் போது அது எந்த நேரத்திலும் முறிந்துவிடும் என்ற பயத்தில் அமர்வதில்லை. ஏனென்றால் அப்பறவை நம்புவது மரத்தின் கிளையை அல்ல அதன் சிறகை.

சிகரம் தொட்டவர்களும் மக்களின் சிந்தனையில் இடம் பெற்றவர்களும் ஒரே நாளில் புகழின் உச்சிக்குச் சென்றவர்கள் அல்ல.

வலிகளைச் சுமந்து தன்னம்பி க்கையால் தனக்கென தனி வழிகளை உருவாக்கிக் கொண்டவர்கள். வாழ்க்கையை படிப்பதற்கும் சாதனை படைப்பதற்கும் வயது தேவையில்லை என்பதை நிரூபித் திருக்கிறார்கள்,

உலகில் பல்வேறுபட்ட சாதனை யாளர்கள் உள்ளத்தில் தன்னம்பிக்கை உள்ளவர்களுக்கு... உடலில் உறுப்புகள் இல்லை என்ற கவலை இல்லை.

இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இல்லாமல் ஒரு மனிதன் வாழ முடியுமா? வாழ்ந்தாலும் சாதிக்க

முடியுமா? அப்படியே சாதித்தாலும் உலகளவில் உன்னத மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? கோடிக்கணக்கான மக்களுக்கு உற்சாகத்தையும் தன்னம் பிக்கையையும் ஊட்ட முடியுமா? தனது திறமையை வெளிக்காட்ட முடியுமா?

இந்த கேள்விகளுக்கெல்லாம் ஆம் எனும் பதில் தான் ''நிக் வாய்சஸின்'' வாழ்க்கை.

பிறக்கும் போதே இரண்டு கால்களும் கைகளும் இல்லை.

பல்வேறு சவால்களை எதிர் கொண்டு ,தான் உயரவேண்டும் என தன்னம்பிக்கையைக் கையிலெடுத்தார்.

இன்று உலகில் எல்லா நாடு களிலும் பயணித்து தன்னம்பிக்கை தளர்ந்த மனிதர்களுக்கு ஊக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் இந்த உன்னத மனிதர்.

காலை எழுந்ததும் கண்ணாடி முன் நின்று உங்களுக்குள் ஒரு சுய பிரகடனம் செய்து கொள்ளுங்கள்.
«நான் மிகச் சிறந்த வெற்றியாளன்»

- ''நான் தன்னம்பிக்கை நிறைந்தவன்''
- ''என்னால் எதையும் சாதிக்க முடியும்''
- ''மலர்ந்துவிட்ட இந்த நாளில் முகமலர்ச்சியோடு என்னால் இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்வேன்''
- ''இன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிட்டு நிறை வேற்றுவேன்''
- ''எனக்குள் எந்த குறைகளும் இல்லை''
- ''மன நிறைவோடு இந்த நாளை எதிர்கொள்ளவேன்''

என்ற நேர்மறை எண்ணங்களோடு காலைப் பொழுதை ஆரம்பித்துப் பாருங்கள்.

எத்தனை உற்சாகத்துடன், மன நிறைவுடனும் அன்றையதினம் அமைகிறது என்பதனை அனுபவித்து உணருங்கள்.

திசைகாட்டிகள் இன்றி காலையில் தன் பயணத்தை தொடங்குகின்ற பறவை, இரை முடித்து, மீண்டும் கூடு திரும்புவதற்கு அது நம்புவது தன் சிறகுகளில் சுமந்து கொண்டிருக்கும் தன்னம்பிக்கையை மட்டும் தான்.

தன்னை விட எடை கூடு தலாக உள்ள பொருளை... எறும்பு அசாத்தியமாகத் தூக்கிச்செல்வதும், அபரி மிதமான தன்னம்பிக்கையால் தான்.

தன்னம்பிக்கை வார்த்தைகளை உங்களுக்குள் விதையாய் விதையுங்கள்.. வெற்றியெனும் விருட்சமாய் அவை வளரும்!

தினமும் மகிழ்ச்சிப் பூக்கள் மலரும்!

வாழ்க்கை எனும் வண்டி நகர் வது..தன்னம்பிக்கை என்னும் இரு சக்கரங்களால் தான்.

எந்நிலையிலும் தன்னம்பிக் கையை இழந்து விடாதீர்கள்...

அந்த மூன்றாம் கை தான் உங்ளுக்கு மிக முக்கியமான» கை..»

இனிது! இனிது!
வாழ்தல் இனிது!

(நற்சிந்தனைகள் இனியும் தொடரும்)

# காதலின் வித்தை

கனவிலும் காதலிலும் எனை களவாடி
வேடிக்கை பார்க்கிறது உனது அன்பு
உயிர் மூச்சில் இழையோடுகிறாய்
உன் பாசத்தாலும் நேசத்தாலும்
எனை திணறடிக்கிறாய்
உன் காதலின் வித்தைகளோ
ஒரு மாயக் கண்ணாடியாய்
என் உருவம் தீண்டிச் செல்கிறதடா

என் சுவாசக் காற்றே
உன் அபரிமிதமான அன்பு எனை
சல்லடையாய் துளையிடுகிறது
நானோ நேசத்தால் உறைகிறேன்.
உனதன்பின் பரிமாணங்கள்
எனை முல்லைக் கொடியாய் சுற்றிட
உனதன்பின் பிடிமானம் எனை
பற்றிப் பிடிக்கின்றன பூந்தென்றலாக...

**- ஃபாயிஸா சஷ்மா**

# பின் இருக்கை மாணவர்கள்



## கவிப்பொய்கை ஜவ்சன் அஹமட்

எந்த ஒரு கல்விக்கூடமாகவோ அல்லது கலாசாலையாகவோ இருப்பினும் கூட, மிக நன்றாக படிக்கும் மாணவர்கள் முதல் பின் இருக்கை மாணவர்கள் அதாவது மாணவர்கள் ஆசிரியர்கள் வழக்கில் சொல்லப் போனால் பின்தங்கிய, படிப்பு ஏறாத «மக்கு» மாணவர்கள் வரை கல்வி கற்பது வழக்கம். இதனை யாரும் பிழை காண்பதும் முடியாத காரியமே.

இதனை வாசிக்கின்ற நேரத்தில் தாம் எந்த இடத்தில் இருந்தவர்கள் என்றும், அதன் விளைவு கள் எப்படியான தாக்கத்தை எம்மில் ஏற்படுத்தியது என்றும் மனக்கண் முன்னே சில நிழற்படங்கள் வந்து செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை.

பாடசாலைக் காலங்களில் பசுமையான நினைவுகளுக்கு பஞ்சமே இல்லை என்பார்கள் அப்படியான சில பசுமையான நினைவுகளில் தான் பலரது வாழ்க்கை சிதைவுண்டு போனதையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

நானும் ஒரு பின் இருக்கை மாணவனாய் சில யதார்த்தங்களை எழுதுகிறேன்.யார் மனதையும் புண் படுத்தும் நோக்கமல்ல

ஒரு வகுப்பறையில் நாற்பது மாணவர்கள் கல்வி கற்குமிடத்து, அனைவரும் வைத்தியர்களாகவும், நீதி பதிகளாகவும், பொறியியலாளர் களாகவும் உருவெடுப்பதென்பது சாத்தியமற்ற ஒரு செயலாகவே கருதுகிறோம்.

ஆனால் அந்த வகுப்பறையில் இருந்துதான் பல் துறைகளில் சாதிக்கும் வல்லமை படைத்த பல படைப்பாளிகள் உருவாகிறார்கள். ஆனால் அவர்கள் வகுப்பறையில் வாங்குகின்ற மதிப்பெண்களோ அல்லது வகுப்பு நிலையோ அவர்களின் வாழ்க்கையை தீர்மானிப்பதும் கிடையாது அது தீர் மானிக்கும் சாதனமும் கிடையாது.

மாறாக, அவை அவர்களின் கல்வி நிலையை அளவிடும் வெறும் அளவுகோல்களாகத்தான் கருதப்படுகின்றன.

ஒரு மாணவனிடம் இருக்கும் அவனது திறமைகளை இனம் காணுவதில் அளப்பெரும் பங்கு ஆசிரியப் பெருந்தகைகளுக்கே இருக்கிறது.

காரணம் மாணவர்களின் கூடுதலான நேரம் பாடசாலைகளில் ஆசிரியர்கள் உடனானதே.

ஆசிரியர்களின் பெரும் பங்களிப்பே அந்த மாணவனை அவன் ஊக்கமுள்ள துறையில் சாதிக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் பெற்றோர்கள் இதில் ஆசிரியர்களுக்கு பக்க பலமாகவே இருக்க முடியும்.

அவல நிலை என்னவென்றால் எத்தனையோ பின் இருக்கை மாணவர்கள் சிலர் பாதியில் கல்விப் பயணத்தை முடித்துக் கொள்கிறார்கள். மீதிப்பேர் நீரில் மூழ்கியவனைப் போல திணறுகிறார்கள், திக்குமுக்காடுகிறார்கள்.

காரணம் என்னவென்று யோசிக்கிறீர்களா? வகுப்பறைகளிலும், வெளிக்களச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள், சக மாணவர்களின் வார்த்தைப் பிரயோகங்கள், செயற்பாடுகள், அணுகு முறைகள் தான் இவற்றுக்குகாரணம்என்றால்மிகையாகாது.

பின் இருக்கை மாணவர்கள் என்றாலே படிக்க இயலாதவர்கள், உதவாக்கரைகள் என்று அவர்கள் தானே உணரும் வகையில் முத்திரை குத்தப்படுகிறார்கள்.

பல இம்சைகள், அவமானங்கள், காழ்ப்புணர்வுகள், இழுபறி கள் அவர்களின் உணர்வு களுக்கும், கனவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கின்றன.

இக்கணம் அறிஞர் அப்துல் கலாம் ஐயாவின் 'நாட்டின் நிறைந்த மூளைகளை வகுப்பறையின் கடைசி பெஞ்சுகளில் காணலாம்.' என்ற கூற்று சற்று எம்மை சிந்திக்கத்

# வாழ்க்கை அப்படித்தான்

எவ்வளவு காயம் பட்டும் உனக்கு
அழுகையே வரவில்லை என்றால்
நீ முதலில் இருந்தே வலி தாங்க
பழகிவிட்டாய் என்று அர்த்தம்.
உன்னோடு சேர்ந்து சிரிப்பதற்கு
உனை சுற்றி நிறைய பேர்
இருப்பார்கள். ஆனால் நீ கண்ணீர்
விடும் போது, அவர்கள் எல்லாம்
காணாமல் போய் இருப்பார்கள்.

ஆண்கள் கண் கலங்கினால்
கோழையென சொல்லி
விடுவார்கள். பெண்கள் கொஞ்சம்
கண்ணீர் விட்டால் நீலிக்கண்ணீர்
என்றிடுவார்கள். உங்களுக்கு
மனம் முழுக்க வேதனை என்றால்
அதை வெளிக்காட்டாதீர்கள்!

இந்த உலகத்தில் மற்றவர்களின்
சந்தோஷங்களை
பார்த்து தாங்களும்
சந்தோஷப்படுகிறவர்கள் எல்லாம்
ஆதி காலத்திலேயே அழிந்து
போய்விட்டார்கள்..

கவலை கூடினால் ஒரேயடியாக
அழுது தீருங்கள்! அதை நினைத்து
தினமும் அழுது உங்களை
நீங்களே அழித்து விடாதீர்கள்!
அதனால் எந்த பிரயோசனமும்
இல்லை. இந்த உலகத்தில்
ஒருதடவை கூட சிரிக்காதவர்களை
நீங்கள் கண்டிருக்கலாம். ஆனால்
அழாத மனிதர்களை கடந்திருக்க
மாட்டீர்கள்.

ஏன் என்றால் வாழ்க்கை
அப்படித்தான்.

**சோதிகா.ரெ**
(ஆகிஷா. $,
கொக்குவில்)

தூண்டுகிறது.

இவ்வாறு பின் இருக்கை மாணவர்களாக இருந்து திறமைகள் இனங்காணப்படாமல் கைவிடப் பட்டவர்கள் பிற்காலத்தில் சமூகச் சீர்கேட்டின் தந்தைகளாவே உருவெடுக்கிறார்கள். இவர்களின் நாசகாரி செயல்களினால் அவர் களைப் பெற்ற பெற்றோருக்கும் அற நெறியையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுத்த பாடசாலைக்குமே இழிவும் அவமானமும் என்பதை நன்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

உலகில் உயர்ந்து உச்சம் தொட்ட துறைசார் நிபுணர்கள் யாரும் வகுப்பறைகளில் உச்சம்தொட்டவர் களோ முன்வரிசைமாணவர்களாகவோ இருந்தது கிடையாது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

எதற்கும் தகுதி இல்லாதவர் கள் என்று ஒதுக்கிய பலர்தான் அவர்கள். இன்றளவிலும் அவர்களின் பல சாதனைகளை எவராலும் முறியடிக்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

இன்று எம்மில் எத்தனையோ பெற்றோர்கள் பாடசாலை தேர்வு மட்ட அறிக்கைகள் தான் தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்ற பிழையானதொரு எண்ணக் கருவை தன்னகத்தே வைத்திருக்கிறார்கள்.

இதனால் தன் பிள்ளைகளின் திறமைகளை இனம்காண்பது கிடையாது. இதனால் அவர்களின் எதிர் காலத்து வளர்ச்சிப்பாதை கேள்விக் குறியாகவே அமைகிறது.

இதன் ஒரு அங்கமாகவே வீடுகளிலும்கூட “படிப்புஏறாதவன்”’ என்ற பெயர் நாமத்தை சூட்டி விடுகிறார்கள். இன்னும் சிலர் தன் பிள்ளைகளை பிறரிடம் அடையாளப் படுத்துமிடத்து “என் இளைய மகன் நன்றாகப்படிக்கும் கெட்டித்தனம் உடையவன் ஆனால் இவரின் சகோதரன் படிப்பில் மக்கு/மந்தம்.” என்று கூறி விடுகிறார்கள். இந்நிலைகள் முற்றிலும் மாற்றம் பெற வேண்டும்.

திறமைகள் இனங்காணப்பட வேண்டும் அதற்கான வழிகளும் அமைக்கப்பட வேண்டும்.

அன்பு ஆசிரியப் பெருந்தகைகளே! நாளைய தலைமுறை யின் வாரிசுகளே! யாரும் சளைத்தவர்களோ திறமைகள் அற்றவர்களோ கிடையாது என்பதை நன்கு நினைவில் கொள்ளுங்கள்.

தோள் தட்டிக் கொடுத்து ஊக்கப் படுத்துங்கள்! உற்சாகம் கொடுங்கள்! திறமைகளை பாராட்டுங்கள்! யாரையும் எதிலும் திணிக்காதீர்கள்!

பின் இருக்கை மாணவர்கள் எங்களால் எதுவும் இயலாது என்ற எண்ணத்தை அவர்களின் மனங்களில் விதைத்து விடாதீர்கள்!

உங்களின் நண்பர்களின் திறமைகளை நீங்கள் இனங்காணுங்கள்! அதில் முன்னேறிச் செல்லும் வழிகளை காட்டிக்கொடுங்கள்!

உடலாலும் மனதாலும் உதவி ஒத்தாசை புரியுங்கள்! அவர்களின் நேர்வழிக்கு இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்! அவர்களும் சிறப்படைவார்கள் உங்களின் வாழ்வும் சிறக்கும்.

# எத்தனை எத்தனையோ ஆசைகள்



என்னை லேசாக்கிக்கொண்டு
காற்றோடு நான் கரையவேண்டும்

புதரில் உள்ள முள் நுனியில்
அமர வேண்டும்

மகரந்தப் பொடிகளோடு கைகோர்த்து
உல்லாசமாய்ப் பறக்க வேண்டும்

கூடு திரும்பும் பறவையின் சிறகில்
அமர்ந்து பயணிக்க வேண்டும்

புல்லின் பனித்துளியில் முகம் பார்த்து
பறக்கும் தும்பியோடு இணைய வேண்டும்

ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவிச் சாரலில்
மிதந்தபடி தென்றலைப் பிடிக்க வேண்டும்

தென்னை மரக்கீற்றுகளில் அமர்ந்து
இயற்கையோடு இணைய வேண்டும்

புன்னைமர நிழலோடு கரைந்து
இளைப்பாறும் எருதுகளின் காயங்களுக்கு
இதமான ஒத்தடம் தர வேண்டும்

ஓயாமல் உழைக்கும் வர்க்கத்தின்
மூச்சுக்குள் புகுந்து வியர்வைத்துளிகளோடு
சங்கமிக்க வேண்டும்

இன்னும் எத்தனை எத்தனையோ ஆசைகள்
மெல்லிய ஓசைகள் அலையலையாய்
என்னுள் பிரவாகமெடுக்கிறது .

ஆனால் மாசற்றக் காற்றோடு பயணிக்க
முடியாது மூச்சற்று வீழ்கிறேன் !

**. கா. ந. கல்யாணசுந்தரம்**

# தங்க மீனாக மாறு!

பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமா? முனைந்து படி! திறமையான விளையாட்டு வீரனாக ஆக வேண்டுமா? நன்றாகப் பயிற்சி செய்! புத்தகம் எழுதி வெளியிட வேண்டுமா? உன் வாசிப்பை அதிகப்படுத்து! ஒரு மேதையாக ஆக வேண்டுமா? தேடலை அதிகப்படுத்து!

பட்டதாரியாக ஆக வேண்டுமா? அதற்காகவே வேலை செய்! பேராசிரியராக மாற வேண்டுமா? அர்ப்பணிப்புடன் செயலாற்று! நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டுமா? கடினமாக உழை! மிகச் சிறந்த வழக்கறிஞராக ஆக வேண்டுமா? முயற்சியுடன் பணி செய்!

வாழ்க்கையை சுதந்திரமாக அனுபவிக்க வேண்டுமா? அனுபவி! கோடீஸ்வரனாக ஆக வேண்டுமா? கஷ்டப்பட்டு உழைத்து விடு! நாடு விட்டு நாடு செல்ல வேண்டுமா? செல்! திருமணம் செய்து களித்திருக்க வேண்டுமா? செய்து கொள்! பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமா? பெற்றுக் கொள்! முகநூலில் எழுத வேண்டுமா? எழுது! நடிக்க, பாட்டுப் பாட வேண்டுமா? செய்! சிறந்த விமர்சகராக வர வேண்டுமா? எழுது!

இது உன்னுடைய வாழ்க்கை. உனக்காக ஒர் இலக்கை செதுக்கிக் கொள்! அதற்காகவே முனைந்து வேலை செய்! கஷ்டப்படு. அதற்காகவே உன்னை அர்ப்பணி! உன் வாழ்க்கை உனக்கானதே! உன் கனவுகள் உனக்கானதே! அவற்றை நனவாக்கவென்றே செயலாற்று!

இல்லாவிடில், உனக்கு நேர்வது பெருமூச்சு விட்டு உன்னை நொந்து கொள்வது மட்டுமே! மற்றவர்களைப் பார்த்துப் பார்த்து கவலைப்பட மட்டுமே! தன் வாழ்க்கை யின் இலக்கு நோக்கிப் பயணிப்பவனைப் பார்த்து தூற்ற மட்டுமே! வெற்றி பெற்றவனை முதுகில் குத்துவது மட்டுமே! மற்றவர்களை குறைகூறி வாழ்வது மட்டுமே உன் இயலுமையாக மாறும். சரியாக மீன்தொட்டியில் கழிவுகளை சாப்பிட்டு வாழும் ஸ்கெவென்ஜர் மீனைப் போல அப்படி வாழ்வது மகாக் கேவலமானதடா.

உன் கனவுகள் மெய்ப்படாமலிருப்பதற்கு, அக்கனவுகளை மெய்ப்படுத்துவதில் எந்த முயற்சியுமின்றி நீ இருப்பதற்கு மற்றவர் கள் பலிக்கடாக்களல்லர். கனவு மெய்ப்பட நீ முயற்சி செய்! கனவை கையகப்படுத்திக் கொள்! அக்கனவின் நிஜத்தில் நீ சுகப்படு! எதைப் போலென்றால் சரியாக ஒரு தங்க மீனைப் (கோல்ட் ஃபிஷ்ஷைப்) போல

உன் வாழ்க்கை உன்னுடையது. அவன் வாழ்க்கை அவனுடையது. நீ உன் வழியில் பயணம் செய்! அவன் அவனுடைய வழியில் செல்வான். உன்னால் மற்றவர்களுக்கு பிரச்சினையில்லையென்றால், வாழ்க்கை எனும் ஜலப்பரப்பில் நீ தடையற்று நீந்து!

மற்றவர்களுடைய கனவுகளுக்கு மதிப்பளி! தனிமனித சுதந்திரத்தை மதி! எவ்வாறு ஒரு விரலைப் போல மற்ற விரல்கள் இருப்பதில்லையோ அதுபோலவே, நாமனைவரும் வித்தியாசமான சிந்தனைகளுடன் வித்தியாசமான கனவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் வெவ்வேறான மனிதர்கள். இந்த எளிய உண்மையை உணர்ந்து கொள்! வாழ்வு சிறக்கும்.

சிங்கள மொழி மூலம்
வைத்தியர் லக்மால் குலசேகர
(වෛද්‍ය ලක්මාල් කුලසේකර)

தமிழாக்கம்
**ஷஸ்னா நாஸிம்**
(காலி)

---

# தனிமை

சிரிப்பு கொண்டு சோகங்களை மறைக்கும் போலி முகங்களை கழற்றி எறிந்து, சோகங்களின் உச்சநிலையில் ஒரு முறையாவது கதறி சத்தமிட்டு அழுது விடுங்கள்!

துரோகங்களைப் பரிசளிப்பவர்களின் முகங்களை கிழிக்கும் படியாக அவர்கள் நினைவுகளையும் கிழித்து முகங்களில் வீசிவிட்டு, ஏமாற்றங்களை அள்ளி எறிபவர்களை வாழ்கையினை விட்டு முற்று முழுதாய்த் தூக்கி எறிந்து விடுங்கள்!

போலிப்பழி சுமத்தி போர்வைகளுக்குள் ஒளிந்து கொள்ளும் உறவுகளை பொறுமையின்றி தூரமாக்கி விடுங்கள்!

இத்தகைய கருமை படிந்த இதயங்களோடு இணைவதை விட தனிமை ஒன்றும் கொடுமையானதல்ல.

**– ஆயிஷா பாத்திமா**

# எழுதியும் தீராது

ஒரு காதலைப் பேசும்
பேச்சைப் போல
ஒரு சோகத்தைத் தந்திடும்
கவியைப் போல
ஒரு நட்பு செய்திடும்
எழுத்தைப் போல

ஒரு நகைச்சுவைக்கான
வரியைப் போல
ஒரு மோகம் கூட்டிடும்
சொற்களைப் போல
ஒரு வன்மம் தீர்க்கும்
வார்த்தைகளைப் போல

ஒரு நீதத்திற்கான
வரிகள் அவ்வளவு
பரிச்சயமாவதில்லை
ஒரு வாய்மைக்கான
வார்த்தைகள் அவ்வளவு
வரவேற்கப்பட்டதாயில்லை

ஒரு நேர்மைக்கான
எழுத்துக்கள் அவ்வளவு
எழுச்சிபெற்றதாயில்லை
ஒரு தர்மத்திற்கான
கவிதைகள் அவ்வளவு
உயர்த்தப்பட்டதாயில்லை

ஒரு பண்பாட்டிற்கான
சொற்கள் அவ்வளவு
பயன்பட்டதாயில்லை
ஒரு மனிதத்திற்கான
பேச்சுக்கள் அவ்வளவு
மாற்றம் செய்ததாயில்லை

ஒரு சச்சரவு தீர்க்கும்
தத்துவங்கள் அவ்வளவு
வாழ்த்தப்பட்டதாயில்லை
ஒரு சமாதானங்கள் கூட்டிடும்
கருத்துக்கள் அவ்வளவு
காக்கப்பட்டதாயில்லை

ஒரு அறியாமை அழிக்கும்
அறப்பொருள்கள் அவ்வளவு
ஆதரிக்கப்பட்டதாயில்லை
ஒரு இயலாமை தகர்க்கும்
பாடல்கள் அவ்வளவு
புழக்கம் வந்ததாயில்லை

ஒரு பண்பாடு பகரும்
விளக்கங்கள் அவ்வளவு
விலைமதிப்பானதாயில்லை
ஒரு நாகரீகம் ஊன்றிடும்
உண்மைகள் அவ்வளவு
உற்சாகமூட்டியதாயில்லை

பாரதி காணா புதுமைகள்
காண்பதாயுமில்லை கறை
மனங்களில்
மாண்புகள் செய்ததாயுமில்லை
மாட்சிமைகள் சேர்ந்ததாயுமில்லை

ஓ... மானிடமே சங்கதி கேள்!
எண்ணற்ற எழுத்துக்களிலும்
எள்ளளவும் மாறிடாத
மானிடங்கள் உள்ள வரை,
எழுச்சி செய்யத்துணியும்
எழுத்துக்களும் சில நல்
இதயங்களும் இருப்பிடம்
தெரியாது  பற்றிக் கருகும்.
பின் கரைந்தே சிதையும்

**இஷாதா முஹம்மத்**
(ஏரூர் கவிமொழி)

# இதய தெய்வங்கள்
# எங்கள் ஆசான்கள்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய நல்ல
நிலைபெறும் கல்வி நல்கும் நம் தெய்வங்களே
விலைமதிப்பற்ற செல்வம் பெறுகின்ற அறிவொன்றே
அதை தலைமுறைதோறும் தரும் உமை தலைதாழ்த்தி
வணங்குகின்றோம்.

ஏட்டில் தலைகுனிந்து எழுதிப்பெறும் அறிவு
நாளாக நாளாக நல்விருட்சமென வளர்ந்து
நாட்டில் நாம் தலைநிமிர்ந்து நடக்கின்ற வழி சொல்லும்.
பாட்டில் நீங்கள் கற்றுத்தரும் படிப்பினைகள்
பயன் பாட்டில் எமக்கென்றும் உதவுகின்ற பொக்கிஷங்கள்.

வெற்றிக்கும் எங்களுடன் கூடவே வருகின்றீர்கள்
நெற்றிக்கு முன்நின்று நீதி எது சொல்கின்றீர்கள்.
தோல்வியிலும் எங்களை தோளுடனே தாங்கினீர்கள்
எங்கள் வாழ்வில் என்றும் உமை மறவாது தொடர்வோமே.

உத்தமர் உங்கள் போற்றிடவும்,புகழ்ந்திடவும்
உலகில் ஒருநாள் ஒருபோதும் போதாது.
நித்தமும் பணிதொடரும் சத்திய மாந்தர் உங்கள்
புத்திமதிகளை போற்றி பணிந்து பின்தொடர்வதே
பொருத்தமானதொரு பிரதியுபகாரமாகும்.

அறிவெனும் ஒளிதந்த அகல்விளக்குகளே எங்கள் ஆசான்களே
அன்பில் குறைவைக்காத பண்பை கொண்டு பணிசெய்வோரே
என்றும் உங்கள் பணியும் வாழ்வும் இந்த வையகம்
உள்ளமட்டும் குன்றாத வண்ணம் நிறைவாக வாய்த்திடவும்
நன்றியறிதலான உள்ளத்தோடு நாம் உமை வாழ்த்துகின்றோம்.
வழிகாட்டியாய்,அறிவுதந்த ஆசிரியராய்,இன்னல்களில்
துணைநிற்கும் தோழமையாய் இன்னும் பல வடிவங்களில்
எங்களுக்காய் பாடுபடும் நல்ல உள்ளங்களை என்றைக்கும்
நன்றியோடு பாராட்டி வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

ஆர்.ஜே.பிரகலாதன் (பிரகவி)

# விளக்கணித் திருவிழா!

விளக்கின் ஒளியாம் விளக்கணித் திருவிழா!
விலகிப் போகும் விரைவாய்த் தொற்றும்!
மீண்டும் வசந்தம் மீள வேண்டும்!
ஆண்டு முழுதும் அமைதி வேண்டும்!
கடந்த நாட்கள் மனத்தின் பாரம்!
கடந்து போவோம் நீண்ட தூரம்!
விழாக்கள் வரட்டும்! விடியல் தரட்டும்!
அழைப்போம் நட்பை! அன்பின் உறவை!
இனிதாய் வாழ்த்த இனிமை சேரும்!
தனிமை போக்கித் தவிப்பை நீக்கி
மனத்தை மகிழ்வாய் மாறச் செய்வோம்!
இணக்க மிருந்தால் எதுவும் முடியும்!
தித்திப் பான தீஞ்சுவை இனிப்பு!
மத்தாப் பூவாம் மலராய்ச் சிதறும்!
ஒலிக்கும் வெடிகள் ஓசை கூட்டும்!
களிப்பாய்ப் பண்டிகைக் காட்சி அழகே!


முனைவர் ஓசூர் மணிமேகலை
தமிழ்நாடு - இந்தியா




# தனி மரம்

தனிமரம் தோப்பானதில்லை
ஆனால் இந்த தோப்பில்
பட்டுவிடும் நிலையில் பல மரங்கள்
அடுக்கடுக்காய் அழகிழந்து நிற்கின்றன.

பூப்பெய்திப் போனவைதான்
பூத்துக் காய்த்துக்
கனிபரப்ப நாதியற்று
களையிழந்து கிடக்கின்றன

காலடியில்  கிடக்கின்ற கன்றுகளும்
நாளை இந்நிலையில் நின்றிடுமோ
என்ற அச்சமும் தான்
அவைகளுக்கு

இந்த தனிமரங்கள் கனிபரப்பும்
காலம் வந்திடுமோ?
ஆளுயரம் வளர்ந்தவைகள் காலுயரக் கன்றுகள்
காணுகின்ற நாள் என்றோ?

தணியாத தாகத்துடன்  பூத்துப்போன விழிகளுடன்
காத்துக் கிடக்கின்றன
தனிமரம் தோப்பாகும் நாளொன்று
வரும்  என்ற நம்பிக்கையில்

ஹாஜரா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் – டிசம்பர் 2021



## சுடரேற்றுவோம் !

தீமைகள் அகன்று தெளிவு ஏற்பட
நாமும் நடப்போம் நல்வழி கொண்டே !

களங்க மில்லா காதல் கொண்டே
விளக்கினை ஏற்றுவோம் வெளிச்சம் பரவவே !

அல்லல் குறையும் அகந்தனில் சுடராய்
நல்ல சிந்தையை நாளும் கொண்டே

தீமை அழிந்து தீதறு வழியில்
தூய்மை கொண்டு துலங்குக வையமே !

விளக்கினை ஏற்றுவோம் விடியல் பரவட்டும்
வளைய வருவோம் வாழ்த்துகள் பெற்றே !

தமிழ்நெஞ்சம் அமின்

பிரான்சு